

அருப்புக்கோட்டை அருகே மல்லாங்கிணறில் உள்ள முன்னாள் அமைச்சர் தங்கபாண்டியன் நினைவிடத்தில் அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, எம்பிக்கள் தமிழச்சி தங்கபாண்டியன், நவாஸ் கனி, தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், மணிமாறன்,எம்எல்ஏக்கள் சீனிவாசன், தங்கப்பாண்டியன், தமிழரசி ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர், முன்னாள் மாவட்ட கவுன்சிலர்கள்,பொதுக்குழு உறுப்பினர்கள், பிராணி அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### விருதுநகரில் தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை அலுவலகம்:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்

**விருதுநகர், ஆக. 01-**

முதல்வர் மு.க.ஸ்டாலின் விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில், ரூ.1.32 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகத்தை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து இந்த புதிய அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கண்ணன், முன்னிலையில், கலெக்டர் சுகபுத்ரா குத்துவிளக்கேற்றி, அலுவலக வளாகத்தில் மரக் கன்றுகளை நட்டு வைத்தார்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றிவரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகள் கட்டுதல், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் , காவல்துறையினர் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பலவேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை என்பது காவல்துறையின் ஒரு பிரிவு ஆகும்.

இத்துறை மாவட்டத்தில், பல்வேறு நுண்ணறிவு தகவல்களை திரட்டி அரசுக்கு வழங்கக் கூடிய பணியினை செய்து வரும் ஒரு முக்கிய பிரிவு ஆகும்.

அந்த வகையில், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறைக்கு பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலக கட்டடம் முதலமைச்சர் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், காவல் துணைக் கண்காணிப்பாளர் கிருஷ்ணராஜ், விருதுநகர் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் லோகேஷ் குமார், காவல் ஆய்வாளர்(தனிப்பிரிவு) மகேந்திர பாண்டியன், சார்பு ஆய்வாளர்கள், தலைமை காவலர்கள், அரசு அலுவலர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தெற்குதெரு, ஆமூர், டி.வெள்ளாளபட்டியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம்

**மேலூர், ஆக 01-**

அன்றாடம் அணுகும் அரசு துறைகளில் சேவை திட்டங்களை அவர்களது இல்லங்களுக்கு சென்று வழங்கும் உங்களுடன் ஸ்டாலின் என்னும் இந்த புதிய திட்டம் முகாம் மேலூர் ஒன்றியம், தெற்கு தெரு அரசுமேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இந்த முகாமில் தெற்குத் தெரு ஊராட்சி, ஆமூர் ஊராட்சி, டி. வெள்ளாள பட்டி ஊராட்சியை சேர்ந்த 858க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மனு கொடுத்தனர்.

முகாமில் துணை ஆட்சியர் (ஆய்வு குழு மாவட்ட அலுவலர்) பஞ்சாபிகேசன், மேலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுந்தரசாமி, சரஸ்வதி, மேலூர் தாசில்தார் செந்தாமரை, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள், ஊராட்சி பணியாளர்கள், ஊராட்சி செயலர்கள், தூய்மை பணியாளர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### அ.தி.மு.க. மாவட்ட இணை செயலாளர் மகன் திருமண விழா:

# எடப்பாடி பழனிசாமி மணமக்களை வாழ்த்தினார்



**ராமநாதபுரம், ஆக. 01-**

ராமநாதபுரம் மாவட்ட அ.தி.மு.க. இணை செயலாளர் கவிதா சசிக்குமார் மகன் திருமணம் நடைபெற்ற நிலையில் அ.தி.மு.க. பொது செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி மணமக்களை நேரில் அழைத்து வாழ்த்தினார்.

ராமநாதபுரம் மாவட்ட அ.தி.மு.க. இணைச்செயலாளரும் முன்னாள் நகர சபை தலைவருமான வக்கீல் கவிதாசசிக்குமார் மற்றும் ராமநாதபுரம் பாலாஜி குரூப் ஆப் கம்பெனி உரிமையாளர் சசிகுமார் ஆகியோரின் மகன் பாலாஜி குரூப் ஆப் கம்பெனியின் நிர்வாக இயக்குனர் பொறியாளர் ஹர்சத் நாராயணன் மணமகனுக்கும்; பொறியாளர் சௌமியா என்ற மணமகளுக்கும் கடந்த மாதம் 7-ந் தேதி அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி நல்லாசியுடன் திருமணம் ராமநாதபுரத்தில் சிறப்பாக நடைபெற்றது.; விழாவில், முன்னாள் அமைச்சர்கள் டாக்டர் மணிகண்டன், உதயகுமார், விஜயபாஸ்கர், நத்தம் விஸ்வநாதன் உள்ளிட்டோரும், நகர் முக்கிய பிரமுகர்கள், அரசியர் கட்சி பிரமுகாட்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

இந்நிலையில் மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற பெயரில் தமிழகம் முழுவதும் சட்டமன்ற தொகுதி வாரியாக சூறாவளி சுற்றுப்பயணம் செய்து வரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிச்சாமி நேற்று முன்தினம் ராமநாதபுரம் வந்தார்.

ராமநாதபுரம் தனியார் மஹாலில் தங்கி இருந்த எடப்பாடி பழனிச்சாமி நேற்று காலை மேற்கண்ட மணமக்கள் ஹர்சத் நாராயணன் மற்றும் சௌமியா ஆகியோரை நேரில் அழைத்து வாழ்த்தினார் அப்போது அ.தி.மு.க. மாவட்ட கழக இணை செயலாளர் முன்னாள் நகர சபை தலைவர் வக்கீல் கவிதா சசிகுமார், மற்றும் அவரின் கணவர் பாலாஜி குரூப் ஆப் கம்பெனி உரிமையாளர் சசிகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

### விருதுநகர், காரியாப்பட்டி அருகே நடந்த

# பட்டாசு ஆலை விபத்தில் பலி எண்ணிக்கை 5 ஆனது

**விருதுநகர், ஆக. 01-**

விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்தில் கருப்பையா, சவுண்டம்மாள், கணேசன், பேச்சியம்மாள் ஆகிய 4 பேர் உயிரிழந்த நிலையில் மேலும் ஒருவர் உயிரிழந்தார்.

விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டி அருகே வடகரையில் ராஜா சந்திரசேகரன் என்பவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை செயல்பட்டு வருகிறது. இந்த பட்டாசு ஆலையில் நேற்று தொழிலாளர்கள் பேன்சி ரக பட்டாசு தாயாரித்து கொண்டிருந்தனர். அப்போது, எதிர்பாராத விதமாக பட்டாசு ஆலையில் வெடி விபத்து ஏற்பட்டது.

இந்த வெடிவிபத்தில் 2 பேர் உயிரிழந்தனர். மேலும், 3 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த வெடி விபத்து தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், கணேசன் என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த நிலையில், வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆக உயர்ந்தது.

இந்த சம்பவம் தொடர்பாக பட்டாசு ஆலையின் மேற்பார்வையாளர், போர்மேன் ஆகியோரை போலீசார் கைது செய்தனர். இந்நிலையில், பட்டாசு ஆலை வெடி விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த முருகன் என்பவர் நேற்று உயிரிழந்தார். கருப்பையா, சவுண்டம்மாள், கணேசன், பேச்சியம்மாள் ஆகியோர் ஏற்கெனவே உயிரிழந்தனர். இதனால், இந்த வெடி விபத்தில் பலி எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது.

# அரசு கலைக்கல்லூரியில் 49-வது பட்டமளிப்பு விழா

**மேலூர், ஆக. 01-**

மேலூர், அரசு கலைக்கல்லூரியில் 49-வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் 29ந் தேதியன்று நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் பாண்டிமாதேவி அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கி பட்டமளிப்பு விழாவினை நடத்தினார். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் தேர்வாணையர் (பொறுப்பு) முத்தையா அவர்கள் பட்டமளிப்பு விழா பேருரையாற்றி



பட்டதாரிகளுக்கு பட்டங்களை வழங்கி சிறப்பித்தார். அப்போது அவர் பேசுகையில்:-

அவர் தமது பட்டமளிப்பு விழா பேருரையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் கல்வி பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. பட்டம் பெறும் பட்டதாரிகள் ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், நன்றி கடன் பட்டவர்கள், பட்டம் பெறுவதுடன் கல்வி நிறைவு பெறுவதில்லை. கல்வியின் நோக்கம் பிறர்நலம் பேணும் சிந்தனையை வளர்ப்பதாகும் என்ற கருத்துக்களைப் பதிவு செய்தார்.

2023-24-ஆம் கல்வியாண்டில் படிப்பை நிறைவு செய்த 11 துறைகளை சார்ந்த தகுதி பெற்ற இளநிலை மற்றும் முதுநிலை பட்டதாரிகள் 542 பேருக்குப் பட்டச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. விழாவில் அனைத்து துறை தலைவர்களும், பேராசிரியர்களும், மாணவ, மாணவிகளும், பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

## இந்தியாவில் கிரிப்டோ முதலீட்டில் சென்னை 10-வது இடம் - காயின்ஸ்விட்ச் கியூ2 2025 அறிக்கை

**சென்னை, ஆக 01-**

2025ஆம் நிதியாண்டின் இரண்டாம் காலாண்டுக்கான (Q2 2025) தனது இந்தியாவின் கிரிப்டோ போர்ட்ஃபோலியோ அறிக்கையை வெளியிட்ட காயின்ஸ்விட்ச் நிறுவனத்தின் தரவுகளின்படி, இந்தியாவின் கிரிப்டோ முதலீட்டில் சென்னை 10-வது இடத்தைப் பிடித்துள்ளது. நாட்டின் மொத்த கிரிப்டோ முதலீட்டில் 2.5% பங்களிப்பு வழங்கிய சென்னை, லார்ஜ்-கேப், ப்ளூ-சிப் மற்றும் மிட்-கேப் டோக்கன்களில் சமச்சீர் முதலீட்டை மேற்கொண்டு, ஒரு சீரான மற்றும் அறிவார்ந்த போர்ட்ஃபோலியோ அமைப்பைத் தத்தெடுத்துள்ளது.இந்தியாவின் கிரிப்டோ சூழ்நிலை மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், பிட்காயின் $123,000-ஐத் தாண்டிய வளர்ச்சி, முதலீட்டாளர்களிடையே நம்பிக்கையை பெருக்கியுள்ளது.

லேயர்-1 டோக்கன்கள் முதலீட்டில் 38.45% பங்கு பெற்றுள்ளன.அதேவேளை மீம் காயின்கள் 19.32% மற்றும் டிஃபை டோக்கன்கள் 13.94% பங்குடன் உள்ளன. மொத்தமாக, இந்தியா முழுவதும் 35 வயதிற்குட்பட்டவர்கள் 71.7% ஆக கிரிப்டோவிற்கு அதிகம் மாறியுள்ளனர். பிட்காயின், டாஜிகாயின், எத்தெரியம் முதலியவை முதலீட்டில் முன்னணியில் உள்ளன. இது குறித்து காயின்ஸ்விட்ச் நிறுவனத்தின் துணைத் தலைவர் பாலாஜி ஸ்ரீஹரி கூறுகையில், இந்தியாவில் கிரிப்டோ சந்தை தீவிர வளர்ச்சியின் பாதையில் உள்ளது. முதலீட்டாளர்கள் தங்கள் போர்ட்ஃபோலியோக்களை அறிவார்ந்த முறையில் பரவலாக அமைத்து வருகின்றனர். இது இந்தியாவை உலகின் முக்கிய கிரிப்டோ சந்தைகளில் ஒன்றாக மாற்றுகிறது என்று கூறினார்.

மரம் மனிதனின் உரம்

## அமேசான் மூன்றாம் தலைமுறை எக்கோ ஷோ 5 ஸ்மார்ட் டிஸ்ப்ளேவை அலெக்சா உடன் அறிமுகப்படுத்தியது

**சென்னை, ஆக 01-**

அமேசான் மூன்றாம் தலைமுறை எக்கோ ஷோ 5 ஸ்மார்ட் டிஸ்ப்ளேவை அலெக்சா உடன் இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஒரு சிறிய 5.5" ஸ்மார்ட் டிஸ்ப்ளே மற்றும் அலெக்சா உடன் சுலபமான வீட்டுக் கண்காணிப்பு, ஸ்மார்ட் ஹோம் கட்டுப்பாடுகளை அனுமதிக்கும் உள்ளமைக்கப்பட்ட கேமரா உள்ளிட்ட புதிய வடிவமைப்பைக் கொண்டுள்ளது. முந்தைய தலைமுறையை விட இரண்டு மடங்கு பாஸ் மற்றும் தெளிவான குரல்களுடன், இது சிறந்த ஒலியுடன் கூடிய எக்கோ ஷோ 5 ஆகும். ஹேண்ட்ஸ்-ஃப்ரீ இசையை வாசிக்கவும் உதவுகிறது - இவை அனைத்தும் அலெக்சா-ஆல் இயக்கப்படுகிறது.all-new எக்கோ ஷோ 5 ¤http://amazon.in/echo show5> இப்போது சார்கோல், கிளவுட் புளூ ஆகிய நிறங்களில் ரூ.10,999 விலையில் கிடைக்கிறது. வாடிக்கையாளர்கள் அமேசான்.இன்,ப்ளிப்கார்ட் மற்றும் ரிலையன்ஸ் டிஜிட்டல், குரோமா ஆகியவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆஃப்லைன் கடைகளில் இதைப்பெறலாம்.

அலெக்சா-வுடன் அன்றாட தருணங்களை மிகவும் உதவிகரமாக மாற்ற வடிவமைக்கப்பட்ட புதிய எக்கோ ஷோ 5-ஐ அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த ஸ்மார்ட் டிஸ்ப்ளே மூலம், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு பயனுள்ள சாத்தியக்கூறுகளை உருவாக்குகிறோம்- உள்ளமைக்கப்பட்ட கேமராவைப் பயன்படுத்தி தங்கள் வீட்டை தொலைவிலிருந்து கண்காணித்தல் முதல் அவர்களின் ஸ்மார்ட் வீட்டை நிர்வகித்தல், சமையல் குறிப்புகள், காலண்டர்கள் போன்ற காட்சி உள்ளடக்கத்தை அணுகுதல், எளிய குரல் கட்டளைகளுடன் ஹேண்ட்ஸ்-ஃப்ரீ இசையை அனுபவித்தல் வரை.

இந்தியா முழுவதும் உள்ள வீடுகளுக்கு எக்கோ ஷோ 5 ஒரு ஸ்மார்ட் துணையாக மாறுவதை நாங்கள் எதிர்நோக்கி உள்ளோம் என்று அமேசான் டிவைசஸ் இந்தியாவின் இயக்குநரும் நாட்டு மேலாளருமான திலீப்ஆர்.எஸ் கூறினார்.

## விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம் ஆறுபடை வீடு பொறியியல் கல்லூரியில் முதுநிலை மாணவர்களுக்கான வரவேற்பு விழா

**சென்னை, ஆக 01-**

விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம் நிகர் நிலைப் பல்கலைக்கழகம்-இன் ஆறுபடை வீடு பொறியியல் கல்லூரி, 2025-26 கல்வியாண்டுக்கான புதிய மாணவர்களை வரவேற்கும் விழாவை எதிர்பார்ப்பு நிறைந்த களையுடன் நடத்தியது. விழா, பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் ஏ.எஸ்.கணேசனின் உற்சாகமான வாழ்த்துரையுடன் தொடங்கியது. துணைத் தலைவர் டாக்டர் அனுராதா கணேசன் தலைமை வகித்ததோடு, கல்லூரி வாழ்க்கையின் முக்கியத்துவத்தையும் மாணவர்கள் பெறவேண்டிய அனுபவங்களையும் பகிர்ந்தார்.விழாவின் சிறப்புரையாளர் சுரேஷ் சாமுவேல், செயற்குழு உறுப்பினர், விநாயகா மிஷன்ஸ் நிறுவனம், மாணவர்கள் சிறப்பாக கட்டமைக்க வேண்டும் என்று ஊக்கமளித்தார். சிறப்பு விருந்தினராக பங்கேற்ற வி.உதயசங்கர், இயக்குனர்,கல்லூரி முதல்வர் முனைவர் ஜேனட் கல்லூரியின் சிறப்பம்சங்களை விளக்கினார்.

முனைவர் ஜி.செல்வகுமார், எச்.சி.எல்.டெக், இன்டெல், என்இசி, மேதினி டெக்னாலஜிஸ்,ஏஎம்டிஇசட், எக்ஸ்டிஐசி (ஐஐடி மெட்ராஸ்) போன்ற நிறுவனங்களோடு கல்லூரி மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் பற்றியும் விவரித்தார். பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் பி.கே.சுதீர், இணை துணைவேந்தர் டாக்டர் ஜெ.சபரிநாதன், மற்றும் பதிவாளர் முனைவர் ஏ.நாகப்பன், காணொலி மூலமாக விழாவில் கலந்துகொண்டு, மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் நல்வாழ்த்துகளை தெரிவித்தனர். பேராசிரியர் பி.ராஜசேகரன் (துணைப்பதிவாளர் - நிர்வாகம்), பேராசிரியர் பி. கார்த்திகேயன் (துணைப்பதிவாளர் - சேர்க்கை), சேர்க்கை பிரிவு அதிகாரி நூர்ஜகான், மற்றும் டிஜிட்டல் மார்க்கெட்டிங் மேலாளர் முனைவர் வாணி ஆகியோரும் நிகழ்ச்சியில் பங்கேற்று மாணவர்களை ஊக்குவித்தனர். முனைவர் சி. வைதேவி, நன்றியுரை ஆற்றினார். தொடங்கியுள்ள மாணவர் தூண்டல் திட்டம், ஐக்கிய நாடுகள் சபையின் 17 எஸ்டிஜிஎஸ்-ஐ அடிப்படையாக கொண்டு, மாணவர்களின் மனநலன், சமூக விழிப்புணர்வு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உணர்வை வளர்க்கும் வகையில் 21 நாட்கள் நடைபெற உள்ளது.

### ரூ.229.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள

# மதுரை மத்திய சிறைச்சாலை கட்டிடங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்



**மேலூர், ஆக. 01-**

மதுரையில் உள்ள மத்திய சிறைச்சாலையில் இட நெருக்கடி காரணமாக மேலூர் அருகே தெற்குத் தெரு அடுத்துள்ள செம்பூரில் 89 ஏக்கர் (சுமார் 36 ஹெக்டேர்) நில பரப்பளவில் புதிய மதுரை மத்திய சிறைச்சாலை கட்டப்பட உள்ளது. அதற்கான கட்டுமான பணிகளை முதலமைச்சர் ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். 229 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள முதல் மத்திய சிறை, 113 சிறைக்காவலர் குடியிருப்புகள், கான்கிரீட் சாலை மற்றும் மதில் சுவர் ஆகியவற்றிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இ.ஆ.ப., மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், இ.ஆ.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் சீமா அகர்வால், இ.கா.ப., காவல்துறை இயக்குநர் (தலைமையிடம்) வினீத் தேவ் வான்கடே, இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சைலேஷ் குமார் யாதவ், இ.கா.ப., சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் முனைவர் மகேஷ்வர் தயாள், இ.கா.ப., தாம்பரம் காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக், இ.கா.ப., சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண், இ.கா.ப., தடய அறிவியல் துறை இயக்குநர் முனைவர் சிவப்பிரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து தெற்கு தெரு ஊராட்சி செம்பூர் கிராமத்தில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் அதற்கான பணிகளை ஆய்வு செய்தார். உடன் மதுரை சிறைதுறை டி.ஐ.ஜி முருகேசன், மத்திய சிறை துறை கண்காணிப்பாளர் சதீஷ்குமார்,மேலூர் வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா,மேலூர் தாசில்தார் செந்தாமரை, மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின், மேலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுந்தரசாமி, சரஸ்வதி, மேலூர் கிளை சிறைச்சாலை வார்டன் செல்வகுருநாதன், செயற்பொறியாளர் ஜேம்ஸ் தாஸ், உதவி செயற்பொறியாளர் ரத்தின குமார், உதவிபொறியாளர் ஆர்.பரமேஸ்வரன், நாமக்கல் வி.சத்தியமூர்த்தி அன் கோ உரிமையாளர் ராஜா, மற்றும் பொது மேலாளர் மணியன், மற்றும் ஆர்.குமரன், மற்றும் வருவாய்த்துறையினர் கலந்து கொண்டனர்.

# முன்னாள் ஜனாதிபதி கலாம் நினைவு நாள்: ரமணாஸ் கல்லூரியில் மரக்கன்று நடும் விழா

**அருப்புக்கோட்டை, ஆக. 01-**

அருப்புக்கோட்டை அருகே அப்துல் கலாம் நினைவு நாளை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் விழா ஸ்ரீ ரமணாஸ் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் வணிகவியல் துறை சார்பாக கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டது. நிகழ்ச்சியில் கல்லூரி சேர்மன் ராமச்சந்திரன், கல்லூரி செயலர் இளங்கோவன், கல்வியியல் கல்லூரி செயலர் சங்கரநாராயணன், போக்குவரத்து செயலர் விக்னேஷ், துணை போக்குவரத்து செயலர் அருண், கல்லூரி முதல்வர் தில்லை நடராஜன் மற்றும் வணிகவியல்



துறைத் தலைவி, சூரிய கலா மற்றும் பேராசிரியர்கள் மாணவிகள் கலந்து கொண்டனர். வணிகவியல் துறை மாணவிகள் மரக்கன்றுகளை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர்.

# வத்தலக்குண்டு: புதிய வணிக வளாக பணிகள் குறித்து பேரூராட்சியினர் ஆய்வு



**வத்தலக்குண்டு, ஆக. 01-**
திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டுவில் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள புதிய வணிக வளாக பணிகளை பேரூராட்சியினர் பார்வையிட்டனர். வத்தலக்குண்டு மார்க்கெட் பகுதியில் கலைஞர்நகர்ப்புறமேம்பாட்டுதிட்டத்தில்ரூ2கோடியே 80 லட்சம் நிதி புதிய வணிக வளாகம் கட்டப்பட்டு நிறைவாக வண்ணம் பூசும் பணி நடந்து வருகிறது. நடைபெற்று வரும் பணிகளை வத்தலக்குண்டு பேரூராட்சி செயல் அலுவலர் சரவணகுமார், பேரூராட்சி துணைத் தலைவர் தர்மலிங்கம், திமுக நகரச் செயலாளர், பேரூராட்சி கவுன்சிலருமான கேசி எனும் சின்னத்துரை, பேரூராட்சி இளநிலை பொறியாளர் கருப்பையா வத்தலகுண்டு பேரூராட்சி தலைமை எழுத்தர் முருகேசன் மற்றும்பேரூராட்சியினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலர்சரவணகுமார் கூறுகையில் ஏறத்தாழ வணிக வளாகபணிகள் நிறைவடைந்துவிட்டது. ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ பெரியசாமி, பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ பி செந்தில்குமார் , ஒன்றிய செயலாளர் கே பி முருகன், பேரூராட்சி தலைவர் சிதம்பரம் ஆகியோர் வணிக வளாகத்தை விரைவில் திறக்க உள்ளனர் என்றார்.

# உணவுப் பிரியர்களை கவரும் புரோட்டீன் பிளஸ் பர்கர்

**கோவை, ஆக 01-**
மெக்டொனால்டின் ரியல் ஃபுட் ரியல் குட் பயணத்தின் ஒரு பகுதியாக, மெக்டொனால்ட்ஸ், மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்துடன் (CFTRI) இணைந்து உருவாக்கிய புதுமையான, ஆரோக்கியமான வரிசையான புரோட்டீன் பிளஸ்-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. புரோட்டீன் பிளஸ் வரிசையுடன், மெக்டொனால்டின் பர்கர்கள் இப்போது சுவையில் சமரசம் செய்யாமல் அர்த்தமுள்ள ஊட்டச்சத்து மேம்படுத்தலை வழங்குகின்றன. வாடிக்கையாளர்கள் இப்போது தங்களுக்குப் பிடித்த பர்கர்களில் ஊக்கப்படுத்தப்பட்ட புரதத்தை அனுபவிக்கலாம். இந்த வரிசையில் அதிகம் விற்பனையாகும் சைவ மற்றும் அசைவ பர்கர்களான மெக்ஸ்பைசி பிரீமியம் வெஜ், க்ரிஸ்பி வெஜி பர்கர், மெக்வெஜி, மெக்ஸ்பைசி பனீர், மெக்ஸ்பைசி பிரீமியம் சிக்கன், மெக்கிரிஸ்பி சிக்கன் பர்கர், மெக்சிகன், மசாலா மெக்எக் மற்றும் மெக்ஸ்பைசி சிக்கன் ஆகிய பர்கர்கள் அடங்கும். ஒவ்வொரு புரோட்டீன் பிளஸ் ஸ்லைஸும் சைவ சோயா மற்றும் பட்டாணி புரதத்தால் செய்யப்பட்ட 5 கிராம் உயர்தர புரதத்தைச் சேர்க்கிறது, செயற்கை சுவைகள் அல்லது வண்ணங்கள் இல்லாமல், மிகவும் விரும்பப்படும் மெனு உருப்படிகளின் மொத்த புரத உள்ளடக்கத்தை அதிகரிக்கிறது, அதே நேரத்தில் ஒரு ஸ்லைஸுக்கும் 34 கிலோ கலோரி மட்டுமே சேர்க்கிறது.

இந்தக் கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த ஸ்விகி உணவு சந்தையின் தலைமை வணிக அதிகாரி திரு. சித்தார்த் பாகூ, "மெக்டொனால்டு புரோட்டீன் பிளஸ் மற்றும் மில்லட் பன் வரிசையுடன் கூடிய பர்கர்களை ஆன்லைனில் அறிமுகப்படுத்துவதற்கான பிரத்யேக தளமாக இருப்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். நுகர்வோர் தங்கள் உணவுமுறைகளில் புரதத்தின் முக்கியத்துவத்தை அறிந்தவுடன், அவர்கள் உடனடியாக தங்களுக்குப் பிடித்த பொருட்களிலிருந்து விலகிச் செல்ல மாட்டார்கள் என்பதை நாங்கள் அறிவோம்.

# ராஜ் உங்கள் கனவுகளுக்கான அறிவை கூட்டுகிறார்

**சென்னை, ஆக 01-**
பிரபலமான பாட்காஸ்ட் 'ஃபிகரிங் அவுட் வித் ராஜ் ஷமானி'யின் நிறுவனர் மற்றும் தொகுப்பாளரான ராஜ் ஷமானியை, ASUS ExpertBook மடிக்கணினிகளின் அதிகாரப்பூர்வ பிராண்ட் தூதராக அறிவிப்பதில் ASUS இந்தியா பெருமிதம் கொள்கிறது : கவலையற்ற வணிகத்திற்காக உருவாக்கப்பட்டது.

18 மில்லியனுக்கும் அதிகமான சந்தாதாரர்களையும், பல்வேறு தளங்களில் 8 பில்லியனுக்கும் அதிகமான பார்வைகளையும் கொண்ட, பரவலாகப் பின்தொடரும் "ஃபிகரிங் அவுட் வித் ராஜ் ஷமானி" என்ற பாட்காஸ்டுக்குப் பெயர் பெற்ற ராஜ் ஷமானி, ASUS ExpertBook நிறுவனத்தின் நம்பிக்கை, மீள்தன்மை, புதுமை, சுயமாக உருவாக்கிய வெற்றி, இடைவிடாத ஆர்வம் மற்றும் மற்றவர்களுக்கு உதவும் விருப்பம்.

இந்த நிகழ்வில் பேசிய ASUS இந்தியா, இலங்கை மற்றும் நேபாளத்தின் வணிக PC மற்றும் ஸ்மார்ட்போன் துணைத் தலைவர் தினேஷ் சர்மா, ராஜ் ஷமானி-யை எங்கள் ASUS ExpertBook மடிக்கணினிகளின் உருவகமாக வரவேற்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம் என்றார். இந்த கூட்டணி லட்சியம் மற்றும் ஒருங்கிணைந் நோக்கத்தால் செயல்படும். தனி நபர்கள் திறனை செயல்திறனாக மாற்ற உதவுவோம்

# சிமாட்ஸ் கோப்பை 2025 க்கான சென்னை மண்டல அளவிலான விளையாட்டு போட்டிகள்

**சென்னை, ஆக 01-**
சிமாட்ஸ் பல்கலைக்கழகம் சிமாட்ஸ் விளையாட்டு வளாகத்தில் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கான சென்னை மண்டல அளவிலான போட்டியான சிமாட்ஸ் கோப்பை 2025-ஐ வெற்றிகரமாக நடத்தியது. இந்த நிகழ்வில் கோ-கோ, கால்பந்து, கைப்பந்து மற்றும் எறிபந்து உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுகளும், 100 மீ, 400 மீ, 800 மீ ஓட்டப்பந்தயங்கள், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல் மற்றும் 4x100 மீ தொடர் ஓட்டம் போன்ற தடகளப் போட்டிகளும் இடம்பெற்றன. இந்தப் போட்டிகளுக்குப் பெரும் வரவேற்பு கிடைத்தது, ஜூனியர்ஸ், சீனியர்ஸ் மற்றும் சூப்பர் சீனியர்ஸ் ஆகிய மூன்று பிரிவுகளில் 100-க்கும் மேற்பட்ட பள்ளிகளைச் சேர்ந்த 4500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். இந்த பிரமாண்டமான நிகழ்வு சிமாட்ஸ் பல்கலைக்கழகத்தின் நிறுவனர் மற்றும் வேந்தரான டாக்டர் ந.மா.வீரையனின் தொலைநோக்கு தலைமையின் கீழ் சாத்தியமானது.

தொடக்க விழாவில் ஆசிய வில்வித்தை அணியின் தலைமை பயிற்சியாளரும், டோக்ஸா ஸ்போர்ட்ஸ் மேனேஜ்மென்ட் தனியார் நிறுவனம் மற்றும் ஈகிள் வில்வித்தை அகாடமியின் நிறுவனருமான டாக்டர் எஸ்.என். உதயகுமார் மற்றும் சர்வதேச கைப்பந்து வீரர் ஏ. மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.இந்த நிகழ்வை சிமாட்ஸ் பல்கலைக்கழகத்தின் காப்பாளர்களான சார்பு வேந்தர் டாக்டர் தீபக் நல்லசாமி, சிமாட்ஸ் பொறியியல் கல்லூரி இயக்குநர் டாக்டர் ரம்யா தீபக், துணைவேந்தர் பேராசிரியர் டாக்டர் எஸ். சுரேஷ் குமார் மற்றும் சார்பு துணைவேந்தர் டாக்டர் அஸ்வனி குமார் ஆகியோர் உற்சாகத்துடன் ஆதரித்து வழிகாட்டினர். நிறைவு விழாவில், சர்வதேச பதக்கம் பெற்ற ஹாக்கி வீராங்கனை ஈ. கிறிஸ்டி எலேனா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். பரிசளிப்பு விழாவில், வெற்றியாளர்களுக்கு தங்களது விளையாட்டு பிரிவுகளுக்கான சிமாட்ஸ் கோப்பை 2025 வழங்கப்பட்டது.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

ராமநாதபுரம் மாவட்டத்தில்

# மீனவர்கள், நெசவாளர்களுடன் இ.பி.எஸ். கலந்துரையாடல்

**ராமநாதபுரம், ஆக.01-**
"மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்" என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டு வரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, நேற்று ராமநாதபுரத்தில் மீனவர்கள், விவசாயிகள், நெசவாளர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது பேசிய எடப்பாடி பழனிசாமி கூறியதாவது: எல்லை தாண்டி மீன்பிடித்தாக படகுகளை பறிமுதல் செய்து, மீனவர்கள் கைது செய்யப்பட்டு, இலங்கை சிறைகளில் தண்டனை அனுபவித்து வருகின்றனர். இலங்கையில் உள்ள மீனவர்களை விடுதலை செய்வதற்கு மத்திய அமைச்சர்களிடம் பேசி தீர்வு காண்பதற்கான முயற்சிகளை செய்வேன்.

விவசாயிகளுக்கு அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் தொடக்க வேளாண்மை வழங்கப்பட்ட பயிர்க்கடன் இரண்டு முறை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. வறட்சியான ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.540 கோடி காப்பீடு தொகை அ.தி.மு.க. ஆட்சியில் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 24 மணி நேரம் மும்முனை மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. கண்மாய்கள் ஆழப்படுத்தப்பட்டன.

ரூ.14 ஆயிரத்து 400 கோடியில் காவேரி - குண்டாறு திட்டத்தை அ.தி.மு.க. ஆட்சியில் மேற்கொண்டோம். ஆனால் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் இந்த திட்டத்தை கிடப்பில் போட்டார்கள். தற்போது மேட்டூர் அணை நிரம்பி 1 லட்சத்து 24 ஆயிரம் கன அடி தண்ணீர் உபரி நீராக கடலில் வீணாக போய் கலக்கின்றது.

16 ஆண்டுகள் மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த தி.மு.க. அரசு, கச்சத்தீவு இல்லாத காரணத்தினால் தமிழக மீனவர்கள் பாதிக்கின்றார்கள் என்று தெரிந்திருந்தும், கச்சத்தீவை மீட்பதற்கு அழுத்தம் கொடுக்கவில்லை. கச்சத்தீவை மீட்க அ.தி.மு.க. சார்பாக மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயக்குமார், ராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் முனியசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக ராமநாதபுரம் சேதுபதி மன்னர் அரண்மனையை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பார்வையிட்டார்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**


**ENROLLMENT NOTICE**
After 10 days of the publication of this notice and within three months thereafter. I, PRIYADHARSHNI .G D/o. S.GUNASEKERAN aged 34 years, permanently residing at 27/2, SENGULAM STREET , KURUNJI NAGAR, THIRUMANGALAM , MADURAI, TAMILNADU- 625 706. Intend having my enrolment as an advocate moved before the Bar council of Tamil Nadu and Puducherry, Bar council building, High court campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar council within 10 days
PRIYADHARSHNI.G

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காரைக்குடி
ஐ.ஏ.நிர் : 02/2024
ஓ.எஸ்.நிர்.140/2023
1.A.ஆயிஷாபீவி
2. A.பல்கீஸ்பீவி
- மனுதார்கள்/வாதிகள்
-எதிர்-
1.நவநீதம்(இறப்பு)
2.குருசாமி
3.கோவிந்தராஜன்
4.தமிழக அரசு அதன் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் மூலம்
5.வட்டாட்சியர், காரைக்குடி
6.மாவட்டப் பதிவாளர், காரைக்குடி
7.சார்பதிவாளர், இணை நிர்:2, காரைக்குடி
- எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்
8.மகாலிங்கம்
9.ரமேஷ்
10.விசாலாட்சி
11.மல்லிகா
த/பெ.மெய்யப்பன்
நிர்.57/66, தேரோடும் வீதி தெற்கு தெரு, காரைக்குடி சிவகங்கை மாவட்டம்
- 8முதல் 11 உத்தேச எதிர்மனுதார்கள்/ 8முதல்11 உத்தேச பிரதிவாதிகள்/
1-ம் பிரதிவாதியின் வாரிசுகள் உத்தேச 11ம்எதிர்மனுதார்/உத்தேச 11ம்பிரதிவாதி கோர்ட்டில் ஆஜராக விளம்பரம்
வாதிகள் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி டவுன், காரைக்குடி முனிசிபல் டவுன், சர்வே வார்டு 3, கலெக்ஷன் வார்டு 19, குறிச்சியேந்தல் என்ற குறிச்சி வயலில், பழைய T.S.No:393 Part, புதிய T.S.No:1387/1C-ல் கட்டுப்பட்ட Plot No : 310 மற்றும் Plot No : 311, புதிய வரிவிதிப்பு எண் : 111/019/03410 மற்றும் 111/019/00929 உள்ள சொத்து தொடர்பாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதில் 1ம்பிரதிவாதியாகிய M.நவநீதம் இறந்து விட்டபடியால் மேற்படியாரின் வாரிசுகளான 8முதல்11 எதிர்மனுதார்களை உரிய நேரத்தில் தரப்பினர்களாக சேர்க்காததால் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரி ஐ.ஏ.நிர்: 02/2024 என மனு தாக்கல் செய்து அதுவும் வருகின்ற 20.08.2025 அன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் உத்தேச 11-ம் எதிர்மனுதார்/11-ம் பிரதிவாதியாகிய தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கிறஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் தங்கள் தரப்பு ஒருதலை பட்சமாக தீர்மாணிக்கப்படும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
N.Sankar, B.Sc,B.L.,
Advocate, Karaikudi.

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், இராமநாதபுரம்
ந.க அ7 / 7200 / 2025
அனீஸ் பாத்திமா,
க/பெ முத்து இப்ராஹீம்,
51/30, கிருஷ்ணராஜபுரம் வடக்கு, சருகனி ரோடு, சம்சுதீன் காம்பவுண்ட், தேவகோட்டை வட்டம், சிவகங்கை மாவட்டம்,.
... மனுதார்
-எதிர்-
வட்டாட்சியர்,
பிறப்பு / இறப்பு பதிவாளர்,
தாலுகா அலுவலகம், திருவாடானை.
-- எதிர்மனுதார்
அறிவிப்பு
எனது தாயார் ஹசினா பானு அவர்கள் கடந்த 10.06.2015 ஆம் தேதி இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், மங்களக்குடி குரூப், மேற்படி கிராமத்தில் உடல் நலக் குறைவினால் இறந்துபோனார். அப்போது எங்களது அறியாமையில் காரணமாக என் தாயாரின் இறப்பை மங்களக்குடி குரூப் பிறப்பு இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய விடுபட்டு போனது. எனவே இறந்துபோன என் தாயார் ஹசினா பானு இறப்பை எதிர்மனுதார் அலுவலக பிறப்பு இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்தரவிடக்கோரி இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
மனுதாரர்

போடிநாயக்கனூர் டி.மு.கோர்ட்டு
O.S.No. 25/2022
முத்துமுருகன்
- வாதி -
-எதிராக -
1. தங்கம்
2. மயில்
3. மகாலட்சுமி
-பிரதிவாதிகள் -
வாய்தா அறிவிப்பு:-
தேனி மாவட்டம். போடிநாயக்கனூர் தாலுகா, டொம்புச்சேரி கிராமம், அண்ணாநகர், எண்.105 என்ற விலாசத்தில் வசித்து வரும் துக்கையாபிள்ளை அவர்கள் மகன் இந்து விவசாயம் சுமார் 64 வயதுள்ள முத்துமுருகன்.
- வாதி -
- எதிராக -
தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, டொம்புச்சேரி கிராமம், நடுத்தெருவில் வசித்து வரும் லேட்.சு. பழனிச்சாமிபிள்ளை அவர்கள் மகன் இந்து சுமார் 45 வயதுள்ள தங்கம்.
-1-ம் பிரதிவாதி -
இந்த நிர் வழக்கின் வாதியானவர் மேற்படி 1-ம் பிரதிவாதிக்கு எதிராக தாவா சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரம் வழக்கு தாக்கல் செய்து அதில். இந்த வாதியை மேற்படி 1-ம் பிரதிவாதி தரப்பில் வாதி தரப்பு நிரூவண வாக்குமூலத்தை பெற்றுக்கொள்ளவும். குறுக்குவிசாரணை செய்யவும் எதிர்வரும் 18.08.2025ந் தேதியில் வாய்தா ஏற்பட்டுள்ளது. மேற்படி தேதியில் சமூகம் நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்றும். தவறும்பட்சம் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
S.செல்வன். B.A.B.L
M.ஜெயபிரகாஷ். M.L.
அட்வகேட்ஸ், போடிநாயக்கனூர்.

முதன்மை சார்பு நீதிமன்றம் திண்டுக்கல்
E.P.No.219/2023
Arb.No.30/2013
M/S.ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிட்.,
அதன் Authorized Signatory
M.ஜனகரன் மூலம்
..... மனுதார்/ கிளெய்மெண்ட்
-எதிர்-
திண்டுக்கல் மாவட்டம், அகரம், கோட்டூர் ஆவரம்பட்டி, பாப்பனம்பட்டி, க. எண்.102-ல் வசிக்கும் பிச்சை அவர்களின் மகன் மணிகண்டன்.
..... 1-ம் எதிர்மனுதாரர்/ 1-ம் எதிர்மனுதாரர்
பொது அறிவிப்பு
மேற்படி நம்பரில் மனுதாரர் சமூகம் நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்து மேற்படி மனு E.P.No. 219/2023 என்று நம்பராகி சமூகம் நீதிமன்றம் மூலம் அனுப்பிய அறிவிப்பை 1-ம் எதிர்மனுதாரர் /1-ம் எதிர்மனுதாரர் ஆகிய தாங்கள் பெற்றுக் கொள்ளாததால் சமூகம் நீதிமன்ற உத்தரவின் படி இந்த அறிவிப்பு செய்யப்படுகிறது. மேற்படி E.P.No.219/2023 மனுவின் 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் எதிர்மனுதாராகிய தாங்கள் 07.08.2025-ம் தேதி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் காலை 10 மணியளவில் ஆஜராகி தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் நேரில் தெரிவிக்கலாம் என்றும், தவறும் பட்சத்தில் மேற்படி நிறைவேற்று மனுவில் தங்களுக்கு எதிராக சமூகம் நீதிமன்றம் ஒரு தலைபட்ச உத்திரவு பிறப்பிக்க நேரிடும் என்று இந்த அறிவிப்பின் மூலம் தங்களுக்கு தெரியப்படுத்தப்படுகிறது.
P. SURESH BASKARAN,
M.B.A., B.L.
Advocate, Dindigul.
Cell 9952331720

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
ந. க. எண்.0545/2025/அ2
இ.ப. வ.எண்.244/2024/ஆ6
ஆ. ராமன், த/பெ.முனியாண்டி, கோனார், கன்னியாபுரம் அஞ்சல் , வேம்பார்பட்டி வழி, திண்டுக்கல் மாவட்டம்.
..மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி நிர் மனுதாரரின் தாயார் வீரம்மாள் என்பவர் 02.06.2022 ம் தேதி அஞ்சுகுழிப்பட்டி கன்னியாபுரம் உள்ள வீட்டு முகவரியில் இறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.
வருவாய் கோட்டாட்சியர் திண்டுக்கல்.

மேதகு சிறப்பு சார்பு நீதிமன்றம் திண்டுக்கல்
M.C.O.P- NO- 217/2025
கருப்பணன்
...........மனுதாரர்
-எதிர்-
கார்த்திகேயன், த/பெ ராமன், க.எண். 4/103/1A, மேற்கு தெரு, சித்தையன்கோட்டை, திண்டுக்கல், 624708.
......... 1 ஆம் எதிர் மனுதாரர்
நோட்டீஸ்
மேற்படி மனுதாரர் வாகன விபத்து இழப்பீடு பரிகாரம் பெற திண்டுக்கல் சிறப்பு சார்பு நீதிமன்றத்தில் மேற்படி எண்ணில் மனு கொடுத்திருக்கிற படியால் அதைப்பற்றி உமக்கு ஏதாவது ஆட்சேபனை இருந்தால் அதை நீங்கள் வருகின்ற 22.08.2025 ஆம் தேதி பகல் 10.00 மணிக்கு நீதிமன்றத்தில் நேரிலாவது வழக்கறிஞர் மூலமாவது ஆஜராகிஅறிவித்துக்கொள்ளவும் அப்படி இல்லாவிட்டால் மேற்படி விஷயமாய் ஒரு தலை பட்சமாய் தீர்மானிக்கப்படும்.
கு.பா. சாக்ரடீஸ், M.A., B.L.,
வழக்கறிஞர், திண்டுக்கல்

**ENROLLMENT NOTICE**
After ten days of the publication of this notice and within THREE months thereafter I, FAHAD KHAN.Z, S/O. K.ZAHIR HUSSAIN, aged 23 years, permanently residing at R-7A, 2nd avenue, PUTHUTHAMARAIPATTI, VNCT lotus villas, Ilangiyendal, Madurai-625107. Intend having my enrolment as an advocate moved before the bar council of Tamilnadu, Bar Council Building, High Court campus, Chennai-104. Those who have any vaki objections may notify the same to the Bar council within 10 days.
FAHAD KHAN.Z

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், இராமநாதபுரம்
ந.க அ7 / 7201 / 2025
ரகுமத் நிஷா, க/பெ. சீனி முகமது
3, அருணாச்சல பொய்கை கிழக்கு, தேவகோட்டை வட்டம், சிவகங்கை மாவட்டம், -மனுதார்
-எதிர்-
வட்டாட்சியர்,
பிறப்பு / இறப்பு பதிவாளர்,
தாலுகா அலுவலகம், திருவாடானை.
-எதிர்மனுதார்
அறிவிப்பு
எனது தாயார் நூருல் அபிலா அவர்கள் கடந்த 15.06.2003 ஆம் தேதி இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், மங்களக்குடி குரூப், மேற்படி கிராமத்தில் உடல் நலக் குறைவினால் இறந்துபோனார். அப்போது எங்களது அறியாமையில் காரணமாக என் தாயாரின் இறப்பை மங்களக்குடி குரூப் பிறப்பு இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய விடுபட்டுபோனது. எனவே இறந்துபோன என் தாயார் நூருல் அபிலா இறப்பை எதிர்மனுதார் அலுவலக பிறப்பு இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்தரவிடக்கோரி இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
மனுதாரர்

**ENROLLMENT NOTICE**
After ten days of the publication of this notice and within three months there after I, MUTHU VENTHAN K, S/o.Krishnamoorthy M, D.O.B: 18.06.1997 Aged 28 years, Permanently residing at No.330, West street, A.Kalayamputhur, Palani (Tk), Dindigul -624615. Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamilnadu & Puducherry Bar Council Buildings, High Court Campus, Chennai – 104.
Those who have any valid objections may, notify the same to the Bar Council within 10 days.
MUTHU VENTHAN K

**பொது அறிவிப்பு**
என்னுடைய கட்சிக்காரர் தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், T. கள்ளிப்பட்டி, கலைஞர் கருணாநிதி தெரு, டோர் 6/3/25 நம்பர் மனையில் குடியிருக்கும் லேட்.ராஜசேகரன் அவர்கள் மனைவி இந்து 59 வயதுள்ள ராஜேஸ்வரி அவர்கள் பெயருக்கு கடந்த 05.07.2025-ம் தேதியில் பெரியகுளம் சார்பதிவகத்தில் 1 புத்தகம், அசல் பத்திரம் எண். 2984/2012 ஆவணம் பெரியகுளம் மூன்றாந்தல் கடை வீதியில் ஜெராக்ஸ் எடுக்க செல்லும்போது தொலைந்து விட்டது. புகார் ரசீது எண்.CNR25359793 பிரகாரம் ஆன்லைனில் புகார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் கிடைக்கும்பட்சத்தில் மேலேகண்ட முகவரியிலோ அல்லது பெரியகுளம் நகர் காவல்நிலையத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் .
இப்படிக்கு,
R.NAGAMANI SENTHIL, M.A.B.L, ADVOCATE,
COMMISSIONER OF OATHS,
No.27, W/8, Madurai Veeran North Street
BODINAYAKANUR (PO), Theni (Dt)-625 513.

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
ந. க. எண்.5404/2025/அ2
இ.ப. வ.எண்.80/2025/ஆ6
சண்முகவேலன் ,
த/பெ. ஆனந்தன்,
நல்லூர், கோட்டையூர் கிராமம் ,
நத்தம் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
..மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி நிர் மனுதாரரின் பாட்டி இராஜம்மாள் என்பவர் 17.07.1967 ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.
வருவாய் கோட்டாட்சியர் திண்டுக்கல்.

**ENROLMENT NOTICE**
After ten days of the publication of this notice and within three months thereafter I, K.SELVAPRAGATHI, D/o.C.KRISHNAMOORTHY, D.O.B: 23.01.2001, aged 24 years, permanently residing at No. 42, Kooraipillaiyar Kovil Street, Rajapalayam, Virudhunagar District, Tamil Nadu, Pin - 626117 Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamilnadu and Pudhucherry bar Council Buildings, High Court Campus, Chennai - 104.
Those who have any valid objections may notify the same to the bar Council within 10 days.
K.SELVAPRAGATHI

**ENROLLMENT NOTICE**
After 10 days of the Publication of this notice and within three months of thereafter. 1, M.THATCHANA, D/o. P.V.Murugan, aged 23 Years, Permanently Residing at 3/185, Vandaiyar Thottam, T.Pudupatti [Po], Kannivadi [Via], Dindigul District, Intend having my Enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu,Bar Council Buildings, High Court Campus, CHENNAI - 104. Those who have any valid objections may Notify the same to the Bar Council within 10 days.
M.THATCHANA


# பழநி நகராட்சி

## ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

பழநி நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பட்டியலில் கண்டுள்ள 9 ஆண்டு குத்தகை இனங்களான 52 கடைகளுக்கு ஒப்படைக்கும் தேதி முதல் 31.03.2027 வரை உள்ள காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு 12.08.2025 ஆம் நாள் செவ்வாய் கிழமை பகல் 11.30 மணிக்கு அல்லது அதற்கு பின்னர் ஒத்தி வைக்கப்படும் நாட்களிலும் நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையாளர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலராலோ பகிரங்கமாக பொது ஏலத்தில் விடப்படும்.

முத்திரையிடப்பட்ட மேலும் கீழ்கண்டுள்ள 52 கடைகளுக்கு மூடி ஒப்பந்தப்புள்ளிகள் 12.08.2025 ஆம் நாள் செவ்வாய் கிழமை பகல் 11.00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். காலம் கடந்து வரும் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். அன்றே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏலம் நடத்தி முடித்தவுடன் வருகை புரிந்தவர்கள் முன்னிலையில் நகராட்சி ஆணையாளராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ திறந்து வாசிக்கப்படும்.

மேலும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கான முன்வைப்பு தொகைக்கும் கூடுதல் ஏலப்பொறுப்புத் தொகைக்கும் தனித்தனியே வங்கியில் 'Commissioner Palani Municipality' என்ற பெயரில் வங்கி வரைவோலை (DD) எடுத்து ஏல தினத்திற்கு முந்தைய நாள் 11.08.2025 ஆம் நாள் திங்கள்கிழமை நாள் பிற்பகல் 3.00 மணிக்குள் அலுவலகத்தில் சமர்ப்பித்து அ1 பிரிவில் ஒப்புதல் சீட்டை பெற்றுக் கொள்ள வேண்டும். இதர விபரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வருவாய் பிரிவில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | கடைகளின் விபரம் | கடைகளின் அளவு | மொத்த கடைகளின் எண்ணிக்கை | கடை 1க்கு முன் வைப்புத் தொகை (ரூ.இலட்சத்தில்) | கடை 1க்கு கூடுதல் பொறுப்புத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | வ.உ.சி.மத்திய பேருந்து நிலையத்தில் கிழக்கு பார்த்த தரைதளம் | | | | |
| A) | (A)கடை எண்கள். 19,20,21,22 | 3.46 மீ x 4.20 மீ (11.35 x 13.80 அடி = 156.63 சதுர அடி) | 4 | ரூ.2.00 | ரூ2.00 |
| 2. | வ.உ.சி.மத்திய பேருந்து நிலையத்தில் கிழக்கு பார்த்த முதல்தளம் (5-வது அழைப்பு) | | | | |
| A) | கடை எண் 23 முதல் 27 வரை. கடை எண்.29 கடை முதல் 35 வரை மற்றும் 37 முதல் 47 வரை | 3.46 மீ x 5.50மீ (11.35 அடி x 18.05 அடி = 204.87 சதுர அடி) | 23 | ரூ1.00 | ரூ2.00 |
| B) | கடை எண்.28 | 3.76 மீ x 5.50 மீ (12.35 அடி x 18.05 அடி = 222.92 சதுர அடி) | 1 | ரூ.1.00 | ரூ.2.00 |
| C) | கடை எண்.36 | 2.46 மீ x 5.50 மீ (8.05 அடி x 18.05 அடி = 145.30 சதுர அடி) | 1 | ரூ1.00 | ரூ.2.00 |
| | மொத்த கடைகள் | 29 | | | |
| 3. | வ.உ.சி.மத்திய பேருந்து நிலையத்தில் குளத்து பைபாஸ் சாலையில் மேற்கு பார்த்த 5 கடைகள் மற்றும் வ.உ.சி.விரிவாக்க மத்திய பேருந்து நிலையத்தில் உட்புறத்தில் கிழக்கு பார்த்த 5 கடைகள். | | | | |
| A) | கடை எண்.1 முதல் 10 வரை உள்ள கடைகள் | 3.50 மீ x 3.25 மீ (11.375 அடி = 122.42 சதுர அடி) | 10 | ரூ1.50 | ரூ2.00 |
| | மொத்த கடைகள் | | 10 | | |

| வ. எண் | கடைகளின் விபரம் | கடை 1க்கு முன் வைப்புத் தொகை (ரூ.இலட்சத்தில்) | கடை 1க்கு கூடுதல் பொறுப்புத் தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 4 | வ.உ.சி.மத்திய பேருந்து நிலையத்தில் குளத்து பைபாஸ் சாலையில் மேற்கு பார்த்த கடைகள் (பழைய கடைகள்) (5-வது அழைப்பு) | | |
| A) | கடை எண்.5,6,8,9,11,12,14, 20,21 (கடை ஒன்றிற்கு) | ரூ 1.50 | ரூ2.00 |
| 5. | வ.உ.சி.மத்திய பேருந்து நிலையத்தில் தெற்கு பார்த்த (மின்சார அறை ஒட்டிய கடைகள் -பழைய கடைகள்) (5-வது அழைப்பு) | | |
| A) | கடை எண்.67 | ரூ1.50 | ரூ2.00 |
| 6. | வ.உ.சி.மத்திய பேருந்து நிலையத்தில் கிழக்கு பார்த்த (பொள்ளாச்சி ரேக் கடைகள் பழைய கடைகள்) (5-வது அழைப்பு) | | |
| A) | கடை எண்.31 | ரூ1.50 | ரூ 2.00 |
| 7. | வ.உசி.மத்திய பேருந்து நிலையத்தில் மேற்கு பார்த்த (மதுரை ரேக் கடைகள் பழைய கடைகள்) (5-வது அழைப்பு) | | |
| A) | கடை எண்.60 | ரூ 1.50 | ரூ 2.00 |
| 8. | வ.உ.சி.மத்திய பேருந்து நிலையத்தில் பிளாக் எண்.3 கிழக்கு கடைசி வடக்கு பார்த்த (பழைய கடைகள்) | | |
| A) | கடை எண்.19 | ரூ 1.50 | ரூ 2.00 |

ந. க. எண்.3007/2024/அ1
நாள். 10.07.2025
வெ. ஆ. எண். 269/ செ.ம.தொ.அ/திண்டுகல்/ 2025.நாள்.31/07/2005

ஆணையாளர் (மு.கூ.பொ)
பழநி நகராட்சி





BAPASI

4 புத்தகத் திருவிழா நாகப்பட்டினம்

நாகப்பட்டினம் மாவட்ட நிருவாகம், பொது நூலக இயக்ககம்,
மாவட்டக் கல்வி தன்முனைப்புத் திட்டம்
மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் &
பதிப்பாளர்கள் சங்கம் இணைந்து நடத்தும்

# நாகப்பட்டினம் 4 ஆம் ஆண்டு புத்தகத் திருவிழா 2025

**நாள்: 01.08.2025 முதல் 11.08.2025 வரை**

நேரம்: காலை 10.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை
அரசினர் தொழிற்பயிற்சி நிலைய ( ITI ) வளாகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில்,
நாகப்பட்டினம்.

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை
திருமதி. **வ. பவணந்தி** அவர்கள்,
மாவட்ட வருவாய் அலுவலர், நாகப்பட்டினம்

தலைமை
திரு. **ப. ஆகாஷ்** இ.ஆ.ப., அவர்கள்,
மாவட்ட ஆட்சித்தலைவர், நாகப்பட்டினம்

புத்தகத் திருவிழாவைத் துவக்கிவைத்து விழா பேருரை
மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
திரு. **அன்பில் மகேஸ் பொய்யாமொழி** அவர்கள்

முன்னிலை
திரு. **வை. செல்வராஜ்** அவர்கள்
நாடாளுமன்ற உறுப்பினர், நாகப்பட்டினம்
திரு. **என். கௌதமன்** அவர்கள்
தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத் தலைவர்
திரு. **ஜெ. முகம்மது ஷா நவாஸ்** அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர், நாகப்பட்டினம்
திரு. **வி.பி. நாகைமாலி** அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர், கீழ்வேளூர்
திரு. **ஓ.எஸ். மணியன்** அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர், வேதாரண்யம்

வாழ்த்துரை
திரு. **சு. செல்வகுமார்** இ.கா.ப., அவர்கள்
மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், நாகப்பட்டினம்
திரு. **கே. பார்கவ தேஜா** இ.வ.ப., அவர்கள்
வன உயிரினக் காப்பாளர், நாகப்பட்டினம்
திருமதி. **கே. ஸ்ருதி** அவர்கள்
திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகப்பட்டினம்
திரு. **இரா. மாரிமுத்து** அவர்கள்
நகரமன்றத் தலைவர், நாகப்பட்டினம்
திரு. **சேது. சொக்கலிங்கம்** அவர்கள்
தலைவர், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் கவிதா பப்ளிகேஷன்
திரு. **எம்.ஆர். செந்தில்குமார்** அவர்கள்
நகர மன்ற துணைத் தலைவர், நாகப்பட்டினம்
திரு. **த.செந்தில்குமார்** அவர்கள்
12 வது வார்டு நகரமன்ற உறுப்பினர்,
நாகப்பட்டினம் நகராட்சி
திரு. **ஆதி. உதயகுமார்** அவர்கள்
ஒருங்கிணைப்பாளர், மாவட்டக் கல்வி தன்முனைப்புத் திட்டம்,
மாவட்டச் செயலாளர், த.மு.எ.க.ச.

நன்றியுரை
திருமதி. **இரா. சிவசங்கரி** அவர்கள்
முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், நாகப்பட்டினம்

## நாள்: ஆகஸ்ட் 1

நூல் வெளியீடு:
**"வரலாற்றில் நாகப்பட்டினம்"** கட்டுரை தொகுப்பு வெளியீடு
வெளியிடுபவர்:
மாண்புமிகு.
**அன்பில் மகேஸ் பொய்யாமொழி** அவர்கள்
பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்.
பெற்றுக்கொள்பவர் :
திரு. **ப. ஆகாஷ்** இ.ஆ.ப, அவர்கள்
மாவட்ட ஆட்சித்தலைவர், நாகப்பட்டினம்

உரை. **வெ.இராமகிருஷ்ணன்** அவர்கள்

நகைச்சுவை:
**அமுதவாணன்**

**பழனி பட்டாளம்**

## நாள்: ஆகஸ்ட் 2

பத்மஸ்ரீ. கலைமாமணி.
முனைவர். **நர்த்தகி நடராஜ்**
மாநில திட்டக்குழு உறுப்பினர்

எழுத்தாளர். **இமையம்**

கவிஞர். **சுகிர்தராணி**

திரைக்கலைஞர்:
**ஐஸ்வர்யா ராஜேஷ்**

மக்களிசை கலைக்குழு:
**செந்தில்கணேஷ் ராஜலட்சுமி**

## நாள்: ஆகஸ்ட் 3

கதைச் சொல்லி. **பவா செல்லதுரை** அவர்கள்

கவிஞர். **யுகபாரதி** அவர்கள்

இசை நிகழ்ச்சி:
இசையமைப்பாளர்
**ஸ்ரீ காந்த் தேவா**

பல்சுவை நிகழ்ச்சி:
விஜய் டிவி கலக்கப்போவது யாரு மற்றும்
லப்பர் பந்து திரைப்படப் புகழ்
**திருச்சி சரவணகுமார் (டி.எஸ்.கே)**
யூடியூப் புகழ் **சுட்டி அரவிந்த்**

## நாள்: ஆகஸ்ட் 4

பட்டிமன்றம்:
தலைப்பு:
**இலக்கியங்களை நாம் கற்பது
இன்புற்று மகிழவா? பின்பற்றி வாழவா?**
நடுவர்:
கலைமாமணி பேராசிரியர்.
முனைவர் **கு. ஞானசம்பந்தன்** அவர்கள்

**இன்புற்று மகிழவே!**
சொற்சிலம்பர் பேரா.
முனைவர் **சிதம்பரம்**
இசைக்குயில் பேரா.
முனைவர் **ஸ்ரீமதி தியாகராஜன்**

**பின்பற்றிவாழவே!**
நாஞ்சில் நாவரசு.
**செல்ல.கண்ணன்**
சொல்லிசைவாணி புதுச்சேரி.
**உமா**

கருத்தரங்கம்:
தலைப்பு:
**சொல் புதிது... பொருள் புதிது.**
கவிஞர். **மனுஷ்ய புத்திரன்** அவர்கள்
தலைவர்,சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு.
இசை நிகழ்ச்சி:
**ரோஷினி
அய்யனார்**
திரைக்கலைஞர்:
**அபர்ணாதாஸ்**

## நாள்: ஆகஸ்ட் 5

திரைப்பட இயக்குனர்
திரு. **பாரதி கிருஷ்ண குமார்** அவர்கள்

சிறப்புரை:
திரு. **வி.பி.நாகை மாலி**
சட்டமன்ற உறுப்பினர், கீழ்வேளூர்

திரைக்கலைஞர்:
**மிர்னாலினி ரவி**

நகைச்சுவை:
**விஜய் டிவி புகழ்
சதீஷ்**

**ராஜவேலு**

## நாள்: ஆகஸ்ட் 6

மருத்துவர் **கு.சிவராமன்** அவர்கள்

பேரா. **இரா. காமராசு** அவர்கள்

சிறப்புரை:
திரு . **வை . செல்வராஜ்** அவர்கள்
நாடாளுமன்ற உறுப்பினர், நாகப்பட்டினம்

பட்டிமன்றம்:
தலைப்பு:
**அன்னைத் தமிழின் அடையாளமாகத் திகழ்வது அன்றைய இலக்கியங்களா?
இன்றைய இலக்கியங்களா?**
நடுவர்:
கவிஞர் மதுக்கூர் **இராமலிங்கம்**

**அன்றைய இலக்கியங்களே!**
கவிஞர் **நா.முத்துநிலவன்**
முனைவர் **மகா சுந்தர்**

**இன்றைய இலக்கியங்களே!**
கவிஞர் **ராஜ்குமார்**
இசைக் கவிஞர்
**ஆலங்குடி வெள்ளைச்சாமி**

இசை நிகழ்ச்சி:
**தேவகோட்டை அபிராமி**

## நாள்: ஆகஸ்ட் 7

இசைக்கலைஞர் மற்றும் ஆய்வாளர்
திரு. **எஸ்.ஜெயக்குமார்** அவர்கள்

திருமிகு. **கிரேஸ் பானு** அவர்கள்

திரைக்கலைஞர்:
திருமதி. **தேவயானி** அவர்கள்

நகைச்சுவை:
**ராஜா, ராஜ்குமார், ஆனந்த்**

## நாள்: ஆகஸ்ட் 8

மருத்துவர் **இரா.கலைக்கோவன்** அவர்கள்

ஊடகவியலாளர் **ச.கார்த்திகைசெல்வன்** அவர்கள்
தன்னம்பிக்கை பேச்சாளர்

சிறப்புரை:
திரு. **ஜெ. முகம்மது ஷா நவாஸ்** அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர், நாகப்பட்டினம்

திரைக்கலைஞர்:
**ரியோ ராஜ்**

நகைச்சுவை:
**முல்லை, கோதண்டம்**

## நாள்: ஆகஸ்ட் 9

ஊடகவியலாளர்
நீயா, நானா **கோபிநாத்** அவர்கள்

தன்முனைப்பு பேச்சாளர்.
**ஈரோடு மகேஷ்** அவர்கள்

திரைக்கலைஞர்:
**மிர்ச்சி சிவா**

கலை நிகழ்ச்சி:
**அந்தோணி தாசன் - ரீட்டா**

## நாள்: ஆகஸ்ட் 10

பட்டிமன்றம்:
தலைப்பு:
**நிறைவான வாழ்விற்கு வழிகாட்டியவர்கள்**
நடுவர்:
கலைமாமணி திண்டுக்கல் **இ. லியோனி** அவர்கள்

**வாழும் கவிஞர்களே!**
கவிஞர். **இனியவன்** அவர்கள்
கடலூர். **தணிகைவேலன்** அவர்கள்
**வாழ்ந்த கவிஞர்களே!**
பேரா. **விஜயகுமார்** அவர்கள்
தேவக்கோட்டை . **ராஜன்** அவர்கள்

திரைக்கலைஞர்:
**பிரியா ஆனந்த்**
தன்முனைப்பு பேச்சாளர்.
**ஈரோடு மகேஷ்** அவர்கள்
சொல்லிசைக் கலைஞர்:
தெருக்குரல். **அறிவு**

## நாள்: ஆகஸ்ட் 11

பாராட்டு, பரிசளிப்பு:
திரு. **ப. ஆகாஷ்** இ.ஆ.ப அவர்கள்
மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம்
திரு. **விஷ்ணுபுரம் சரவணன்** அவர்கள்

திரைப்பட இயக்குனர்:
இயக்குனர். **கரு பழனியப்பன்**

காமெடி சரவெடி:
**விஜய் டிவி கலக்கப்போவது யாரு புகழ்**
மனித நேயர் **பாலா**

**விக்கி சிவா**

# அழைப்பின்மகிழ்வில் : மாவட்ட நிருவாகம், நாகப்பட்டினம்